விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 21 செவ்வாய்க்கிழமை (06.08.2002) தொலைபேசி 3378 ஒலி 230




# அமுக்க வெடியில் உழவு இயந்திரம் சிக்கியது-சாரதி உடல் சிதறிப் பலி

## அரியாலை முள்ளி வீதியில் துயரச் சம்பவம்

(திருநெல்வேலி)

உளவு இயந்திரம் ஒன்று அமுக்க வெடியில் சிக்கி, வெடித்துச் சிதறியதில் அதன் சாரதி உடல் சிதறி அவ் இடத்திலேயே பரிதாபகரமாக மரணமானார். மற்றொரு நபர் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்துயரச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் அரியாலை முள்ளி வீதிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த உளவு இயந்திரச் சாரதி ஜெயசிங்கம் ஜெயச்சந்திரன் (வயது 26) என்ற இளைஞனே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார். செல்லையா நிக்ஷன் (வயது 24) என்பவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

(08ம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பினர் இன்று மொறகொடவை சந்திப்பர்

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இன்று காலை இடம்பெறவுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கும் இடையில இடம்பெற்ற பேச்சுக்களின்போது அரசு - புலிகள் பேச்சுவார்த்தை ஆரம்பமான பின்னரே மீள் குடியமர்வு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென பிரதமர் தெரிவித்து இருந்த நிலையில், இச்சந்திப்பு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை அமைச்சர் மிலிந்த மொறகொடவுடனான சந்திப்பின் பினனர் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவையும் தமிழ்க் கூட்டமைப்பினர் சந்தித்துப் பேசவுள்ளனர்.

(த)

## ஐ.தே.கட்சி நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் முடிவு

# மூன்று நிபந்தனைகளுக்கு

# ஜனாதிபதி இணங்கவேண்டும்

## இல்லையேல் பாராளுமன்றம் கலைப்பு

(நமது நிருபர்)

☆ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குதல்.
☆ நிறைவேற்றுக்குழு ஆட்சி முறையை அமுல்படுத்துதல்.
☆ கட்சிவிட்டுக் கட்சி தாவும் சட்டமூலம்

ஆகிய மூன்று நிபந்தனைகளையும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனை அவர் ஏற்க மறுத்தால் பாராளுமன்றத்தை கலைக்கும் தீர்மானம் எடுக்கப்படும். இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் நிறைவேற்றுக் குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசிற்கும் இடையே ஏற்பட்டுள்ள இழுபறி நிலையை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூடி தற்போதைய அ... பின்னரே மேற்கண்ட தீர்மானங்களை எடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பி... டம் இருந்து பெற்ற பின்னரே பாராளுமன்றத்தை கலைப்பதற்கான தீர்மானத்தை பாராளுமன்றத்தில் மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவை வழிக்குக்

(02ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறைக் கடலில்

# கடற்படையினர் தாக்கி மீனவர் படுகாயம்

(மந்திகை)

கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் கடற்படையினரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தங்கவடிவேலு சிவஞானசுந்தரம் (வயது 27) என்பவரே கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறைக் கடலில் மீனவர்கள் கடற்

(02ம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் பேச்சுக்கு முன்னர்

# முஸ்லிம்களின் எதிர்காலம் குறித்து அரசு தெளிவான உறுதியைத் தரவேண்டும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்களின் எதிர்காலம் குறித்து அரசாங்கம் தெளிவான ஒரு உறுதிப்பாட்டை தந்த பின்னரே விடுதலைப்புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களில் ஈடுபடவேண்டுமென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 30 கிராமங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் அங்கு உடனடியாக மீளக் குடியமர்த்தப்படல் வேண்டும்.

இவை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள்

(08ம் பக்கம் பார்க்க)

...நுள்ள இழுபறி நிலையை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழு கூடி தற்போதைய அரசின் நிலைபற்றி விரிவாக ஆராய்ந்த

...வேற்றுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை ஜனாதிபதி சந்திரிகா குமாதுங்காவுக்கு அனுப்பி வைத்து அதற்குரிய பதிலை அவரி...

...டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவை வழிக்குக்

(02ம் பக்கம் பார்க்க)

கிழக்கு மாகாணத்தில் 30 கிரா...

(08ம் பக்கம் பார்க்க)

# தச்சனாமடுப் படுகொலை அடையாள அணிவகுப்பு இன்று

(மன்னார்)

மன்னார் மடுத் தேவாலயத்திற்கு அருகாமையில் உள்ள தச்சனாமடுப் பகுதியில் இடம்பெற்ற படுகொலை சம்பந்தமாக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள 12 சந்தேக நபர்களும் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் நாளை புதன்கிழமை அடையாள் அணிவகுப்பிற்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

இந்த அடையாள அணிவகுப்பில் படுகொலை செய்யப்பட்ட பஸ் உரிமையாளரின் சகோதரரும் மற்றும் இருவரும் சந்தேக நபர்களை அடையாளம் காட்டவுள்ளனர்.

இப் படுகொலை தொடர்பாக விடுதலைப்புலிகளின் காவலில் உள்ள பிரதான சந்தேக நபரை அடையாள அணிவகுப்பிற்கு அனுப்பிவைக்கு

(08ம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்குப் பின்னர் இடைக்கால நிர்வாகம் அமையும்

## தனியார் தொலைக்காட்சிக்கு பிரதமர் பேட்டி

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவாரத்தை கரடுமுரடான பாதையூடாகவே முன்னெடுத்துச் செல்லவேண்டியுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் பின் அரசியல் அமைப்பின் கீழ் இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படலாம். அத்தகைய இடைக்கால நிர்வாக அமைப்பு அரசியல் அமைப்பை ஏற்றுக்கொண்டதற்கு சமனாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்து 25 வருடம் பூர்த்தியடைந்ததை ஒட்டி தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் நாம் பதவி ஏற்ற பின்பு யுத்த

(08ம் பக்கம் பார்க்க)

# மாவட்ட அபி. குழு தலைவராக ஆனந்தசங்கரி எம்.பி நியமனம்

## அமைச்சர் மகேஸ்வரன் கடும் ஆட்சேபம்

(கொழும்பு)

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், யாழ் மாவட்ட எம். பியுமான வி.ஆனந்தசங்கரியும், வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக ராஜகுகனேஸ்வரனும், புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனாவினால் நியமிக்கப்பட்டதற்கு அமைச்சர் தி.மகேஸ்வரனும், செல்வம் அடைக்கலநாதன் எம்பியும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக வி.ஆனந்தசங்கரி நியமிக்கப்பட்டதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் அமைச்சர் மகேஸ்வரன் ஆட்சேபித்தபோது மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவரை நியமிப்பதற்கு ஜெயலத் ஜயவர்தனாவுக்கு அதிகாரம் இல்லை என்றும் அதனால் பிரதமர் அலுவலகமே சொல்ல வேண்டும் என்றும் பிரதமர்

(08ம் பக்கம் பார்க்க)

# லண்டன் கண் வைத்திய நிபுணர்கள் யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை

## 12ம் திகதி முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

லண்டனில் இருந்து வருகை தரவுள்ள கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் குழு, யாழ். போதனா வைத்தியசாலையில் எதிர்வரும் 12ம் திகதி தொடக்கம் 10 நாட்கள் வரை தங்கியிருந்து கற்றாக் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளது.

இச்சத்திர சிகிச்சைக்கு ஏற்கனவே கண் பரிசோதித்தவர்களுக்கு தபால் மூலம் வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சிகிச்சைக்கு உட்படும் நோயாளிகள் அனைவருக்கும் இலவசமாக கண்ணுக்குள் வில்லைகள் பதிக்கப்படும்.

இதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தையும் யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சைப் பிரிவினர் மேற்கொண்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ். சதுர்முகம் அறிவித்துள்ளார்.

(இ)

# தென்மராட்சி அழிவுகளைப் புனரமைக்க கடன் வழங்க இலங்கை வங்கி தயாராகவுள்ளது

## வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது சேதமடைந்த வீடுகள்வர்த்தகநிலையங்களைப் புனரமைப்பதற்குரிய கடன்உதவிகளைப் பெற்றுத் திரும்பக் கட்டக்கூடியவர்களுக்கு இலங்கை வங்கி கடனை வழங்கத்தயாராகவுள்ளது.

இவ்வாறு இலங்கைவங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர்திருமதி வீ-எம்.துரைராஜா நேற்றையதினம் சாவகச்சேரி இலங்கைவங்கிக் கிளையை சாவகச்சேரியில் திறந்து வைத்து உரையாற்றும் போது தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் இலங்கை வங்கியின் செயற்பாட்டுமுகாமையாளர் கே பாலசுப்பிரமணியம் பிராந்தியமுகாமையாளர் எஸ்.நடராஜலிங்கம் மேற்தரக்கிளையின் பிரதான முகாமையாளர் கே.விக்னராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி இலங்கை வங்கிக்கிளையின் முகாமையாளர் கே.தவயோகம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் திருமதி வீ.எம் துரைராஜா தொடர்ந்து உரையாற்றும்போது,

இங்கு சிறுவியாபாரம், சிறுகைத்தொழில் மற்றும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களுக்கு கடன்வசதிகளைச் செய்துகொடுக்கும் இலங்கைவங்கி 63வருடம் சேவையைப் பூர்த்தி செய்துகொண்டபோதிலும் இன்றும் இளமையாகவுள்ளது சாவகச்சேரி இலங்கைவங்கி ஆரம்பித்து 25வருடத்தினை இவ்வருடம் பூர்த்திசெய்யவுள்ளது.

இலங்கைவங்கி அரசவங்கியாக இருக்கின்றபடியால் நாட்டின் அபிவிருத்தி புனரமைப்புப் பணியிலும் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம்உண்டு எமது நாடுசிறியதாயினும்கூட இதுவரை காலத்தில் எந்தவொருவங்கியும் வங்குரோத்து நிலைக்குப் போகவில்லை அவ்வகையில் நாட்டில் வங்கிச்சேவை போற்றும்படியாகவுள்ளது.

நாட்டின் வங்கிச்சேவையில் ஆரோக்கியமான போட்டி இருப்பது வரவேற்கத்தக்கது பொதுமக்கள் தம்மிடம்இருக்கும் பணத்தினை அரசவங்கிகளில் வைப்பில் செய்பது நல்லது எனக்குறிப்பிட்டார்-

செயல்பாட்டு முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் அங்கு உரையாற்றும்போது.

வங்கி வாடிக்கையாளர்களின் நலன்களைப் பேணுவதில் இலங்கைவங்கி என்றுமே முன்னணியில் இருந்துவருகின்றது குடாநாட்டுமக்களின் நிதிவளர்ச்சிக்கு எமதுவங்கி ஆரோக்கியமான சேவைகளைவழங்கஎன்றும்தயாராகவுள்ளது எமது வங்கியின் காங்கேசன்துறை, ஊர்காவற்றுறைகிளைகளை மிகவிரைவில் அவற்றின் சொந்தஇடங்களில் இயங்கச்செய்ய முயற்சித்துவருகின்றோம் எனக் கூறினார்.

பிராந்திய முகாமையாளர் எஸ் நடராஜலிங்கம் மற்றும் வங்கி வாடிக்கையாளர்கள் சார்பில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்சங்கச் செயலாளர்டாக்டர்எஸ்.எஸ்.அருளானந்தம், கல்விப்பணிப்பாளர் வி,செல்வராஜா ஆகியோர் அங்கு உரைநிகழ்த்தினர்.

தென்மராட்சியில் இடம்பெற்ற இடம்பெயர்வினைத் தொடர்ந்து இவ் வங்கி26 மாதகாலத்தின் பின் மீளவும் சாவகச்சேரியில் இயங்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது-

(உ-77)

சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்து கொழும்பில் எம்.பி பி எஸ் படித்த 28 வயது பூரட்டாதி 4 ம் பாதம் உடைய டாக்டர் மணமகனுக்கு குறைந்தது A/L படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு விளம்பர இல 301, வலம்புரி, 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். (5751)

## க.பொ.த (உ|த) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் இணையத்தில் வெளியிடப்பட்டன.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றின் முன்னணிப் பெறுபேறுகள் வருமாறு;

யாழ்.இந்து மகளிர் கல்லூரி

கணிதம்

ஸ்ரீ.பவித்திரா 2ஏ சி, ச.தாட்சாயினி ஏ.2பி, ச.பத்மனோஜனா ஏ பி சி, சு துவாரகா ஏ பி சி,

விஞ்ஞானம்

ம.சாயினி ஏ 2பி,

வர்த்தகம்

க.யாமலை 2ஏ பி, வி.நிர்மலா 2ஏ பி, சி.கார்த்திகா 2ஏ சி, இ நர்சிவா ஏ 2பி, சி.தமிழினி ஏ பி சி, யோ.யோகமதி ஏ பி சி, லோ.தசாயினி ஏ பி சி, செ பாலரூபினி ஏ பி சி, க கமலினி ஏ பி எஸ், தா.சிறிவித்தியதர்ஷினி ஏ சி எஸ்,

கலை

வி.சர்மினி 3ஏ, அ.சிவசஜனி 3ஏ, இ.ரஜினா 2ஏ பி, ஸ்ரீ.தர்பனா ஏ 2பி. இ.அன்பரசி ஏ 2பி, ஜெ சுமித்திரா ஏ 2சி, இ காயத்திரி ஏ 2சி, த முகிர்ந்தினி ஏ.2சி, த.தர்சிகா ஏ 2சி, ம வாசுகி ஏ 2பி, நா ராஜவதனி ஏ பி சி.

(உ)

### விளையாட்டு போட்டி

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் தென்னிந்திய திருச்சபையின் பகல் பராமரிப்பு நிலைய மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பி ப 2.30 மணிக்கு டி.எஸ். மதியாபரணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(த-260)

### கடற்படையினர்

தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபொழுது இரவு8.30 மணியளவில் குண்டாந் தடிகளுடன் படகில் வந்த கடற்படையினர் மீனவரை மோசமாகத் தாக்கியதாகவும், இதனால் தலையிலும்தோள் மூட்டிலும் பலத்த காயங்களுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது

(த-23)

### மூன்று நிபந்தனை

கொண்டுவரத் தவறும்பட்சத்தில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் எடுப்பதிலும் அரசுபல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாக அரசியல்வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளது

இதேவேளை நேற்றுஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு கூடியபோது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பொதுத்தேர்தல் ஒன்றுக்குத் தயாராகுமாறு உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்நேரமும் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம், அல்லது இப்போதைய ஆட்சியைக் கவிழ்த்து புதியதொரு ஆட்சியை ஏற்படுத்த முயலலாம்என்றும்தெரிவித்த பிரதமர் புதியதொரு தேர்தலை சந்தித்து அதில் பெரும்பான்மைப் பலத்தைப்பெற்று ஸ்திரமான ஆட்சியை அமைப்பதுதான் ஒரே வழி என்றும் கூறியுள்ளார்.

பிரதமரின் இக்கூற்றுக்கு செயற்குழு ஆதரவு தெரிவித்துள்ளது (ம)

## கொக்குவில் இந்துவில் கணனிப் பயிற்சி கற்கை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படவிருக்கும் கணனிப் பயிற்சி வகுப்புகள் நாளை 7 ந் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது

இப்பயிற்சி நெறிக்கு பாடசாலையை விட்டு விலகிய மாணவ, மாணவியர் அனுமதிக்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் அறிவித்துள்ளார். பயிற்சி பெற விரும்புபவர்களை நாளை பிற்பகல் 3.00 மணிக்கு தமது சுய விபரத்துடன் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந)

## வை.கோவை விடுவிக்ககோரி நாளை யாழ்நகரில் பேரணி

(யாழ்ப்பாணம்)

பொடாச்சட்டத்தின் கீழ் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அண்மையில் தமிழகப்பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை-கோபாலசாமி மற்றும்பழ.நெடுமாறன் ஆகியோரை விடுவிக்கக்கோரி யாழ்நகரில் நாளை கண்டன ஆர்ப்பாட்டப் பேரணிஒன்று நடைபெறவுள்ளது.

வலிகாமம், தென்கிழக்கு பிரதேச வெகுஜனஅமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக்கண்டன ஆர்ப்பாட்டப்பேரணி நாளைகாலை10மணிக்கு கந்தர்மடம் பலாலிவீதி ஆலடிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி யாழ் மத்தியபஸ்நிலையத்தை வந்தடையவுள்ளது. அங்கு கண்டனக் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

(ம)

### முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(சண்டிலிப்பாய்)

பண்டத்தரிப்பு செண் மேரிஸ் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை பி.ப 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

(இ-260)

## அழைப்புக் கட்டளை

இல 16 பிரிவு 55 ( )

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதி மன்றத்தில்

சதாசிவம் சத்தியசுதன் பெண் பூங்குழலி
நாயன்மார்கட்டு - யாழ்ப்பாணம்.
வழக்காளி

வழக்கு இல மணவிலக்கு 265 எதிர்
சதாசிவம் சத்தியசுதன்
நெல்லியடி வதிரி
எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி தனக்கும் எதிராளியாகிய உமக்கும் இடையே 1990ம் ஆண்டு பங்குனி மாதம் 19ந் திகதி அன்று சமயாசாரப்படி இடம்பெற்ற திருமணத்தை ரத்துச் செய்து ஒரு சட்டபூர்வமான மணநீக்கத் தீர்வையை மன்று இடவேண்டும் என்று இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் இதனோடிணைக்கப் பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2002 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20ந் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவிர்தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவு பெற்றதரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக்குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

எம்மால் வரையப்பட்டது நீதிமன்றக் கட்டளைப்படி
கனகரத்தினம் அசோசியேட்ஸ் து.சிறீமோகன்
வழக்காளியின் சட்டத்தரணி பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்

குறிப்பு; விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து. சிறீமோகன்
கையொப்பம் - பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்.

2002 ஆண்டு ஆவணி மாதம் 01ம் ஆந் நாளாகியஇன்று

(5778)

யாழ்.மாநகரசபைக்கு லொறிமூலம்
தார் ஏற்றித் தருவதற்கான

## கேள்வி அறிவித்தல்

மாநகரசபைக்குத் தேவையான தார்பரல்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனக் கிளை சப்புகஸ்கந்தக் களஞ்சியத்தில் இருந்து லொறி மூலம் ஏற்றிவந்து யாழ் மாநகரசபைக் களஞ்சியத்தில் ஒப்படைப்பதற்கான சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றோம். விண்ணப்பங்கள் யாவும் மாநகரசபை ஆணையாளருக்கு பதிவுத்தபால் மூலம் 19-08-2002ம் திகதியன்று முற்பகல்; 10-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக கூறுவிலைகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

| விபரம் | 1தார்பரலுக்குஏற்றுக்கூலி |
|---|---|
| 1.140லீற்றர்கொண்ட(301)பரல்கள் | ........ |
| 2.172லீற்றர்கொண்ட(245)பரல்கள் | ........ |

சேவையிலுள்ள
மாநகர ஆணையாளர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(கி-4810)

முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு

# உத்தரவாதமளிக்காது விட்டால் பேச்சுக்கு ஆதரவளிக்க மாட்டோம்

## கண்டிப்புடன் ஹக்கீம் கருத்து

(கொழும்பு)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர், வடக்கு - கிழக்குப் பகுதியிலுள்ள முஸ்லிம் மக்களின் தனித்துவத்துக்கும், பாதுகாப்புக்கும் உத்தரவாதமளிக்காது விடின் பேச்சுக்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு அளிக்காது.

இவ்வாறு நேற்று முன்தினம் கிண்ணியா பிரதேச சபை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது கட்சியின் தலைவரும் முஸ்லிம் விவகார அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தைகளின் பலனாக உத்தேச இடைக்கால நிர்வாகம் ஒன்று அமையுமானால், அதில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவமும் உரிய முறையில் இடம் பெறவேண்டும்,

தென் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மூன்று தொகுதிகளை மட்டும் முஸ்லிம்களுக்கு வழங்குவதன் மூலம், முஸ்லிம்களின் பிரச்சினைக்கு தீர்வு கண்டு விடமுடியாது.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு உரியதீர்வுகள் காணப்பட வேண்டும்.

அதேவேளை, தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயர்,

தேர்தலைக் கண்டு தமது கட்சி அஞ்சி பின்வாங்காது.

தேசியக் கட்சிகளை ஆட்சிப் பீடமேற்றி அழகு பார்ப்பது முஸ்லிம் காங்கிரஸின் நோக்கமல்ல எனினும், மத்திய அரசாங்கத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக திகழ்வதே முஸ்லிம் காங்கிரஸின் சாதனை ஆகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

தற்போதைய நிலைமையைப் பரிசீலிக்க

# அமெ. பிரதி இராஜாங்க அமைச்சர் 22 இல் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சட் ஆம்டேச் எதிர்வரும் 22 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார் என பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லவும், பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது தொடர்பாகவும், மேலும் பரிசீலனை செய்வதற்காகவே அவர் விஜயம் செய்யவுள்ளார் என அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு- கிழக்குபகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளை துரிதப்படுத்துவது தொடர்பில் அமெரிக்காவின் உதவிபெறுவது தொடர்பாக அவருடன் இங்கு கலந்துரையாடப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அமெரிக்க விஜயத்தின் போது நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு உட்பட பல்வேறு விடயங்களிலும் உதவி புரியப் போவதாக அமெரிக்கா உறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# ஐக்கிய இலங்கைக்குள் மக்களின் உரிமையைக் காப்பதே நோக்கம்

## அரசின் நிலைப்பாடு குறித்து கொடித்துவக்கு விளக்கம்

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் வாழ்ந்து வரும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் நோக்கமாகுமென கல்வியமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம் பெற்ற அல்பிட்டிய ஆனந்த மத்திய மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில்நடைபெற்று வரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் நோக்குடன், அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு இடையூறுவிளைவிக்க முயல்வோரை மக்கள் கண்டிக்க வேண்டும் எனவும்,

அரசு ஆட்சி பீடம் ஏறிய காலம் தொட்டு நாட்டு மக்களின் உரிமைகள் ஓரளவு பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

# பலமான அடித்தளத்திலேயே பேச்சுக்கள் ஆரம்பமாகும்

## பீரிஸ் தெளிவு படுத்துகை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஐக்கிய தேசியமுன்னணி அரசுக்கும் இடையேயான சமாதானப்பேச்சுக்கள் பலம் கொண்ட அடித்தளத்துடன் ஆரம்பிக்கப்படும் என அரசியலமைப்பு விவகார வியாபார அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்தெரிவித்துள்ளார்.

இருதரப்பினராலும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, நாட்டு மக்கள் அனைவரினதும் உள்ளங்களில்சமாதானம் குறித்த எதிர்பார்ப்புக்கள் தோன்றியுள்ளன.

சர்வதேச உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்காக அவசரமாக ஆரம்பிக்கப்படும் பேச்சுவார்த்தைகள்இடையில் முறிந்துவிடலாம். தீர ஆராய்ந்துஆறுதலாகமேற்கொள்ளப்படும் பேச்சுக்களின் மூலம் இத்தகைய சந்தர்ப்பங்களை தவிர்த்துக் கொள்ளலாம்.

எனவேதான் தாய்லாந்தில் ஆரம்பிக்கப்படவுள்ள சமாதானப்பேச்சுக்கள் தாமதமாகின்றன.

அத்துடன் இருதரப்பு பேச்சுக்கள் குறித்த நிகழ்ச்சி நிரல்களும் இன்னும் பூர்த்தியடையவில்லை எனவும்குறிப்பிட்டு தெரிவித்துள்ளார். (உ-8)

# கொள்ளைக் கும்பல் உறுப்பினர்கள் கைது

(கொழும்பு)

கொழும்புநகர்ப் புறங்களை அண்டிய பிரதேசத்தில் 6 கொள்ளைக்கும்பல்களைக் சேர்ந்த 13பேரை நேற்று முன்தினம் கொழும்புமத்திய குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து 10கைக்குண்டுகள், 5கைத்துப்பாக்கிகள் அவற்றுக்கு வேண்டிய தோட்டங்கள் உட்படவேறு பல ஆயுதங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு மத்திய குற்றப்புலனாய்வுப் பிரிவு,மட்டக்கொட றப்புக்கணை, பாதுக்கை,மற்றும் வடமேல் மாகாண விசேட பொலிஸ் குழுக்கள் இணைந்து நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நடவடிக்கையின் போது பொலிஸாருக்கும் இக் கும்பல்களுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டின் போது, கொள்ளையர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

# எதிர்வரும் மாதங்களில், வட- கிழக்கில் போலியோ சொட்டு மருந்து வழங்கல்

(சுதுமலை)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமையும், ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமையும் சகல 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் உள்ள எல்லா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் உள்ள குடும்பநல, சேவை உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று சகல 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின், விபரங்களைப் பெற்று வருகின்றார்கள்.

இம் முறை கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்றஇடங்களில் இருந்து அதிகளவு மக்கள் யாழில் வந்துமீளக் குடியமர்ந்திருப்பதால் சிறுவர்களின் விபரங்களைப்பெற்றுக்கொள்வதுகாலதாமதத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஷ-252)

பாடசாலைகள் தோறும்

# தகவல் தொழில் நுட்பம் கற்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் தகவல் தொழில்நுட்பத்தைக்கற்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டபிரதமர் ரணில்விக்கிரமசிங்க அங்கு கைச்சாத்திட்ட 'ஈலங்கா' என்னும் ஒப்பந்தத்திற்கு அமையவே பாடசாலைகளில் தகவல் தொழில் நுட்ப கற்கை பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாடசாலைமாணவர்களின் தொழில் நுட்ப அறிவை விருத்தி செய்வதே இதன் நோக்கமாகும். (உ-8

# கூடைப் பந்தாட்ட போட்டி முடிவுகள்

(சுண்டுக்குளி)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, அதன் 150 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கோப்பாய் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் ஆதரவுடன், யாழ். மாவட்டத்தில்உள்ள கழக அணிகளுக்கு இடையில் நடத்திவந்த கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரின், இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும், கல்லூரி அதிபர் என். சிவகடாட்சம் தலைமையில் கல்லூரி விளையாட்டரங்கில் மின்னொளியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணி, அதனை எதிர்த்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை 23:18 என்ற புள்ளிகள் கணக்கில் பலத்த போட்டியின் பின் வென்றது.

இவ்வாட்டத்தில் சிறந்த வீராங்கனையாக ஜொலிஸ்ரார் அணி வீராங்கனை செல்வி நிசாந்தினி தெரிவு செய்யப்பட்டார்.

இறுதியாக இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில், யாழ். பல்கலைக் கழகஅணி, அகனை எதிர்த்து ஆடிய பற்றீஸியன் அணியை 63:27 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெகு இலகுவாக தோற்கடித்து வெற்றிக் கேடயத்தை தனதாக்கி கொண்டது. இவ் ஆட்டத்தில் சிறந்த ஆட்ட வீரனாக பல்கலைக் கழகஅணி வீரன் சாந்த குணாகரன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக சுன்னாகம் மக்கள் வங்கி பிரதிமுகாமையாளர் பி. கார்த்திகேசுவும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க முகாமையாளர் எம். ஞானரட்ணமும் ஸ்ரான்லிக்கல்லூரி விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர் எஸ். தர்மராஜனும் கலந்து கொண்டனர். (ஷ-110)

ஜனாதிபதியின் கைப்பை விவகாரம்

# சட்டமா அதிபரிடம் அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் கைப்பை குறித்த விசாரணைகளை நடத்துவதற்கு குற்றப்புலனாய்வு தடுப்புப்பிரிவினர் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறவுள்ளனர்.

சர்ச்சைக்குரிய இக்கைப்பை குறித்து இதுவரை காலமும் நடத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பான அறிக்கைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

வெளிநாட்டிலிருந்துஇறக்குமதி செய்யப்பட்ட இந்தக் கைப்பையில்'வி.எச்.ஏ-9' ரக உயர்தரமினிவீடியோகமெரா பொருத்தப்பட்டிருப்பதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது தெரிந்ததே. (உ-8)

## ஆலயச் சூழலின் சுத்தத்திற்கு கேடு

(கல்வயல்)

கச்சேரி- நல்லூர் வீதியில் அமைந்துள்ள நாச்சியம்மன் ஆலயச் சூழலில் இறந்த உயிரினங்கள், குப்பை கூழங்கள் மற்றும் மிருக எச்சங்களை பொறுப்பற்ற விதத்தில் சிலர் போட்டு வருவதாகவும்,

இதனால் அங்கு இறை வழிபாடியற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், அப்பாதை யூடாகச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-111)

## கொருப்பனவு

2001-2002 கல்வி ஆண்டைச்சேர்ந்த மாணவர் உதவிப்பணத்திற்கு தகுதி பெற்ற முதலாம் வருட, சிரேஷ்ட மாணவர்களுக்குரிய கொடுப்பனவுகள்இன்றிலிருந்துயாழ்ப்பாணப்பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையில் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளது என்று நலச்சேவைகள் உதவிப்பதிவாளர் அறிவித்துள்ளார். (ஷ)

# எழுதுமட்டுவாழ் - கரம்பகம் மக்கள்

## மீளக்குடியமர ஆவன செய்யப்பட வேண்டும்

### பாதுகாப்பு அமைச்சருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியில் பெருமளவு குடும்பங்கள் மீண்டும்குடியமர்வதற்கு ஆவன செய்யப்பட வேண்டும்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்கட்சியின்யாழ்.மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் ஜீ.கஜேந்திரகுமார் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவிற்கு அனுப்பி வைத்த மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எழுதுமட்டுவாழ் கரம்பகத்தை உள்ளடக்கிய பிரதேசம் அதி உச்ச பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டபடியால் அப்பகுதியில் வசித்த மக்கள் தமது சொந்த வீடுகளில் மீண்டும் குடியமர முடியாததுடன், தமது பயிர் நிலங்களில் பயிர் செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

இதனால் இம்மக்களின் வருமானம் பாதிக்கப்பட்டதுடன் பெரும் உளப்பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளனர்.

இதேபே லவே வலிகாமம் வடக்குப் பகுதி மக்களும் கடந்த 15 வருடகாலமாக சொந்த வாழ்விடங்களை விட்டு இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலும் அந்நிய வீடுகளிலும் மே சமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

அரசு-புலிகள் புரிந்துணர்வின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட இரு பகுதி மக்களும் தமது சொந்த இடங்களில் மீண்டும் குடியேறி தமது ஜீவனோபாய முயற்சிகளை செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ் விடயங்களை தங்களது மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

இவ்வாறு அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

### சட்ட விரோத மண் அகழ்வு அரசியல் பணிமனையில் மக்கள் முறைப்பாடு

(துன்னாலை)

கடந்த சில வாரங்களாக வடமராட்சிப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மண் மற்றும் கல் அகழ்வு நடவடிக்கைகள் துரிதமாக இடம் பெறுவதாக வடமராட்சி அரசியல் பணிமனையில் முறைப்பாடு செய்ய பட்டுள்ளது.

அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வடமராட்சி தெற்கு வயல் பிரதேசங்களான தம்பான், சரம்பான், கஞ்சகம் போன்ற பகுதிகளில் சட்ட விரோதமாக பெருமளவு மண் அகழ்வு இடம் பெற்று வருகிறது. இவ்வாறு அகழப்படுகின்ற மண் திருட்டுத் தனமான முறையில் தில்லையம்பலம் மற்றும் கப்பூது வீதியூடாக ஆவரங்கால் நீர் வேலிப பாதையூடாக வலிகாமம், பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு விற்கப்படுகிறது. இதனால் இப்பகுதி இயற்கை வளம் பெரும்பாதிப்புக்குள்ளாகிறது.

இதே போன்றுவடமராட்சி வல்லை வெளி பெரு நிலப் பகுதியில் பெருமளவு பாறாங்கற்கள் சட்டவிரோதமாக அகழப்பட்டு வருவதால் மழை காலங்களிலே இப் பிரதேசம் மண்ணரிப்புக்கு உள்ளாகும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஷ-4)

### தேசிய மட்ட போட்டிக்கு தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

இம் மாதஇறுதிப் பகுதியில் மாத்தளையில் நடை பெறவுள்ள தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிகளில், யாழ்.மாவட்டத்தில் இருந்து குழுப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளோர் விபரம்,

பூப்பந்தாட்டம்
எஸ். வாணுறேகா, சி. கனிஸ்லா, பி துஷாந்தினி, கஜே. குயின்சிக்கா, எஸ். மைதிலி.

மேசைப்பந்தாட்டம்
எஸ். வாணுறேகா, எஸ் சுகந்தினி, எஸ். திலகவதி பி. பிருந்தா, எஸ் கயனி; எல்லே
எஸ். தயாளினி. எஸ். சந்திரப்பிரியா, வி. ஸ்ரீதேவி, வி. மீரா:

வலைப்பந்தாட்டம்
எஸ். தயாளினி, ரி. சுதணா எஸ். அஜந்தா, எஸ் சங்கீதா பி.பிருந்தா, கே. நீர் ஜா, எஸ். நிஷாந்தினி.

கூடைப்பந்தாட்டம்
என் சற்குணானந்தன்.

உதைப்பந்நாட்டம்
அ. றெட்ணிமார்ஷல்.

(உ-2-110)

### தொலைத் தொடர்புக் கொள்கையில் மாற்றம் விரைவில் அமுலாகும்

(கொழும்பு)

அரசாங்கத்தின் புதிய தொலைத்தொடர்புக் கொள்கையின்படி, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளுக்கான கட்டணங்கள் குறைக்கப்படவுள்ளன.

அத்துடன், செல்லிடத் தொலைபேசிகளின் உள்வரும் அழைப்புகளுக்கும் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

இதன்படி எதிர்காலத்தில் தனியார்துறை தொலைத் தொடர்பு நிறுவனங்களும் 'லைன்' தொலைபேசிகளை வழங்கமுடியும் அத்துடன், சர்வதேச அழைப்புக்கான சேவைகளையும் வழங்க முடியும்.

தொலைபேசி பாவனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும். இது தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஒரு முன்தேவையாகும். புதிய முறை இப்பொழுது அமுலில் இருக்கிறது. ஆனால் அதற்கான உரிமையை வழங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று தொடர்பாடல் அமைச்சின் செயலாளர் குமார் அபயசிங்க தெரிவித்துள்ளார். அடுத்தவாரம் புதியகொள்கை அமுலுக்கு வந்துவிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

### யாழ் நகரை அண்டிய பிரதான வீதிகளால் பயணிப்பதில் சிரமம்

யாழ்: ஆஸ்பத்திரி வீதியின் இருமருங்கிலும் காணப்படும் மண் மேடுகளால் பாதசாரிகள் மற்றும் வாகனச் சாரதிகள் பெருஞ் சிரமப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

தொலைத்தொடர்பு சேவையினை விஸ்தரிக்கும் வகையில் வீதிகளில் வெட்டப்பட்ட கிடங்குகளில்இருந்து அகற்றப்பட்ட மண், மற்றும் கற்கள் வீதிகளில் குவிக்கப்பட்டுள்ளன.

இதுவரை அதனை எவரும் ஒப்புரவு செய்யாததால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் உட்பட பாதசாரிகள் பலரும் வாகனங்களுக்கு வழிவிடும் போதும் ஆட்களை விலத்தி நடக்கும்போதும் தடக்குண்டு வீழ்வதையும், விபத்துக்காளாவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இது தவிர, யாழ் நகரப் பகுதியில் கே. கே.எஸ். வீதி. கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி ஆகியவற்றிலும் பொது மக்கள் இதே சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

பிள்ளையார் பிடிக்கக் குரங்கானகதைபோல், தொலைத் தொடர்பு வசதியை மேம்படுத்தப்போய், வீதி விபத்துக்களையும் வீண் உயிரழிவுகளையும் ஏற்படுத்தும் நடவடிக்கையாக அமைந்துவிட்டதென பொதுமக்கள் இது குறித்து அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

(உ-2)

### சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு உதவி ஆணையாளர் (கணக்காய்வு) பி. சிவலிங்கம் நாளை காலை 9.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் உத்தியோகபற்றற்ற கணக்காய்வாளரை சந்திக்கவுள்ளார்.

(உ)

### யாழ்.பல்கலைக்கழகத்திற்கு விரைவில் நீச்சல் தடாகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் விரைவில் நீச்சல்தடாகம்அமைக்கப்படவுள்ளதுடன் றொக்கி, கிரிக்செற், உதைப் பந்தாட்டம்ஆகியவிளையாட்டுக்களுக்கு விரைவில் ஆடுகளங்கள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழகவிளையாட்டரங்கில் சில தினங்களுக்கு முன் இடம் பெற்ற கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு பல்கலைக்கழக விளையாட்டுத்துறை அனுசரணையுடனும் குடாநாட்டுவர்த்தக நிறுவனங்களின் அனுசரணையுடனும் இடம்பெற்றது.

துணைவேந்தர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

நிதிநெருக்கடி நிலைமையின் காரணமாக சில வசதிகளை ஏற்படுத்துவதில் சில தாமதங்கள் ஏற்பட்டது எனினும் காலக் கிரமத்தில் தடங்கல்கள் யாவும் நிவர்த்திசெய்யப்படும் என்றார்.

(க-19)

### இராசி பலன்

6- 8- 2002
(ஆடி 21 செவ்வாய்)
திரயோதசி பி. இ.
4 07 வரை
திருவாதிரை பி ப5.17 வரை
ராகுகாலம்- 3.04- 4.34
நல்ல நேரம்- 10 34- 12.04
பிரதோச விரதம்,
மூன்றாம் ஆடிச் செவ்வாய்

**மேடம்**
காரிய நன்மை, அன்னியர் சந்திப்பு, வாகன சுகம், சுவாரஸ்யம்.

**இடபம்**
இலட்சுமி கரம், சகோதரர் உதவி, முயற்சி தாமதம், பெண்கள் உதவி.

**மிதுனம்**
பெரியோர் சந்திப்பு, தொழில் முயற்சி, கற்பனை மிகுதி, முயற்சி கை கூடும்;

**கடகம்**
உணர்ச்சி வசப்படல், பிதா வழி நன்மை, பொருள் விரயம், காரிய தாமதம்.

**சிங்கம்**
தெய்வ தரிசனம், பெருமையடைதல், காரிய நன்மை, தொழில் சிந்தை.

**கன்னி**
அதிகாரம், பிறர் உதவி, அதிக பிரயாசை, முயற்சி கை கூடும்.

**துலாம்**
புதிய திட்டமிடல், உடல் நலக் குறைவு,. அச்சமான நிலை, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
எதிர் பாராத பிரச்சினை, உடல் நலக் குறைவு, வாகன பயம், வேலைக் கஷ்டம்.

**தனுசு**
நண்பர்கள் சந்திப்பு, பிரயாண நன்மை, காரிய அனுகூலம், களஸ்திர நன்மை.

**மகரம்**
தொழில் விருத்தி, சத்துரு ஜெயம், ஆரோக்கியம், காரிய நன்மை,.

**கும்பம்**
தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, அரச ஆதரவு, சொத்துக்களால் கவலை.

**மீனம்**
ரோக பயம், விரும்பாத உறவு, முயற்சி தாமதம், மனச் சஞ்சலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

### வருடாந்த உற்சவம்

(ஏழாலை)

ஏழாலையம்பதி அருள்மிகு புங்கடி புவனேஸ்வரிஅம்பிகை தேவஸ்தான மஹோற்சவம் கடந்தவெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறு நாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

(ஷ)

### ஒலி, ஒளிப்பதிவுக் கருவிகள் அடங்கிய நவீன கைப்பை ஜனாதிபதியின் தேவைக்காக

## கொள்வனவு செய்யப்படவில்லையாம்

(கொழும்பு)

அதியுயர் தொழில்நுட்பம் கொண்ட ஒலி, ஒளிப்பதிவுக்கருவிகள் உள்ளமைந்த பெண்கள் கைப்பை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவில்லை. விடுதலைப்புலிகளின் நடவடிக்கையாளர் ஒருவருடனான சந்திப்பை பதிவுசெய்வதற்கென்று பெண்ணொருவருக்கு ஒப்படைக்கப்படவிருந்தது.

ஆயினும், அதுவும்கூடநடைபெறவில்லை. தேர்தல் குறுக்கிட்டு விட்டது என்று கடந்த செவ்வாயன்று குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபரும், ஜனாதிபதி பாதுகாப்பு ஆலோசகருமான ரி. வி. சுமணசேகர தெரிவித்துள்ளார்.

மேற்படிகைப்பையின்விலை 4 இலட்சத்து 45 ஆயிரம்ரூபா என்றும், இவ்வாறாக ஒரு கைப்பை தருவிக்கப்பட்டது; இது முதற்தடவையல்ல என்றும் தெரிவித்த சுமணசேகர, புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்ததகவல் சேகரிப்பவரின் ஆளடையாளங்களை கூற முடியாதென்றும் தெரிவித்தார்.

இதேவேளை, கமராவிற்கான பணம் இரகசியக்கணக்கிலிருந்து வழங்கப்பட்டிருந்ததென்றும், மாதாந்தம் சுமணசேகரவுக்கு 5 இலட்சம் ரூபா வழங்கப்பட்டு வந்தது என்றும், இதில் கணிசமான ஒரு தொகை தமிழ் அரசியற்கட்சிகளின் உயர் மட்டத்தலைவர்கள்சிலருக்கு கிடைத்துவந்தது என்றும அறியவந்துள்ளது.

மங்கலான ஒளியிலும் படம் பிடிக்கக்கூடியகமராவுடனான சர்ச்சைக்குரிய கைப்பை இப்பொழுது மாயமாக மறைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# இன்று ஒரு தகவல்

## டாக்டர் பயம் வேண்டாம்

'நான் இந்த உலகத்தில் எதற்கும் பயப்படமாட்டேன் சார்' என்று மார்தட்டுவார் ஒருவர். அவருக்கு ஒருநாள் திடீர்என்று உடம்பு சௌகரியமில்லாமல் போனது. சரி, புறப்படுங்கள் டாக்டரிடப் போய்விட்டு வரலாம் என்று கூப்பிட்டார்கள். அது எதற்கு... வேண்டாம் என்று லேசாக நடுங்க ஆரம்பித்துவிட்டார். 'என்ன சார்...இது? அவ்வளவு தைரியமாகப் பேசுகிறீர்கள். டாக்டர் என்றால்மட்டும் இப்படிப் பின்வாங்குகிறீர்கள்? என்று கேட்டிருக்கிறார்கள். அவரிடம்போனால் ஊசிபோடுவார்கள். ஊசிஎன்றால் எனக்கு ஒருமாதிரியாக இருக்கும்' என்றார்.

இவர் இருக்கட்டும் டாக்டர்என்றால் பொதுவாக எல்லாருக்குமே ஒருபயம் உள்ளுக்குள் இருக்கத்தான் செய்கிறதாம். இருந்தாலும்அதை யாரும் ஒத்துக் கொள்வதில்லை. பயப்படுவதாக வெளியில் காட்டிக்கொள்வதுமில்லை. இதுசம்பந்தமாக சில 'சர்வே' யெல்லாம் எடுத்துப் பார்த்திருக்கிறார்கள். அந்தப் புள்ளிவிபரம் என்ன சொல்கிறதென்றால், அநேகமாக எல்லோருக்கும் இந்தப் பயம் இருக்கிறதாம். அதுவும் பெண்களைவிட ஆண்களுக்குத்தான் இந்தப்பயம் அதிகமாக இருக்கிறதாம் எனக்குத் தலையைவலிக்கிறது. வயிற்றை வலிக்கிறது என்று வெளியில் காட்டிக்கொள்வது கூட ஒரு பலவீனம் என்று ஆண்கள் நினைக்கிறார்களாம். கிட்டத்தட்ட எல்லோருமே அப்படித்தானாம்.

சரி...இந்த டாக்டர் பயத்துக்கு என்னகாரணமாக இருக்கும். அதைப்பற்றியும் ஆய்வுபண்ணி சில விபரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். மனிதர்களில் பலர் சாவதற்குக்கூடப் பயப்படுவதில்லை. ஆனால் வியாதிஎன்றால் பயப்படுகிறார்களாம். ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. மனிதசுபாவம் கெட்ட செய்தியை கேட்க விரும்புவதில்லை. டாக்டரிடம் போனால்... அவர் என்ன சொல்லி விடுவாரோ என்கின்றபயம். உங்கள் உடம்பில் ஒரு கோளாறு என்றால் அதைச் சொல்லித்தானே ஆகவேண்டும். சொன்னால் உங்களுக்குப் பிடிக்காது என்பதற்காக அதைச்சொல்லாமல் இருந்துவிடமுடியுமா? இன்னொருவிதமான பயம் என்னவென்றால்... டாக்டரிடம் போய்விட்டால்...அவர் சொல்கிறபடியெல்லாம் நடக்கவேண்டியிருக்குமே... அதற்குமேல் நாம் நமது இஷ்டப்படி நடக்கமுடியாதே... அப்படியென்கிற ஒரு நினைப்பு வேறு வந்து விடுகிறது.

கோப்பி யென்றால் மிகவும் பிரியமாகச் சாப்பிடுகிறோம். டாக்டர் ஏதாவது ஒரு மருந்தைக் கொடுத்து சாப்பிடச் சொல்லி, அது முடிகிறவரையும் கோப்பியையும் கண்ணாலேயே பார்க்கக் கூடாது என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது? என்கின்ற தயக்கம், டாக்டரிடம் போனால் நமது பழக்க வழக்கத்தை மாற்றிக் கொள்ளச் சொல்வாரோ என்கிற பயம், டாக்டரிடம் போய் விட்டால் அந்த நிமிடத்திலிருந்து நாம் இன்னொருவர் கையில் விழுந்து விடுகிறோம் என்கிற எண்ணம் வந்து விடுகிறது. அதன் பின்னர் அவர் சொல்கிறபடியெல்லாம் நடக்க வேண்டுமே என்கிற நினைப்பு வந்துவிடுகிறது இவைகள் சேர்ந்துதான் உள்ளுக்குள் ஒரு பயமாக மாறி விடுகிறதென்பது நிபுணர்கள் கணிப்பு.

ஒரு பெரியவர் என்னிடம் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார். அவர் அப்போது, ''சார் மனிதனுக்கு நாலு விதத்தில் சாவு வருகிறது'' என்று சொன்னார் எப்படி என்றேன். ஒன்று விபத்து, இரண்டு தற்கொலை, மூன்று கொலை, நான்கு டாக்டர்களின் கவனக்குறைவு என்றார். இது அவர் கொஞ்சம் வேடிக்கையாகவும், மிகைப் படுத்தியும் சொன்ன ஒருவிஷயம் இன்றைய தகவலிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், நமது உடம்புக்கு ஒரு கஷ்டம் வந்ததென்றால் அதை வெளியில் சொல்வதற்குத் தயங்கக் கூடாது வெட்கப்படக் கூடாது. சரியான - பொருத்தமான டாக்டரைத் தெரிந்தெடுக்க வேண்டும். அப்படித் தெரிந்தெடுத்த பின்னர்டாக்டரைப் பற்றிய பயம் நமக்குத் தேவையில்லை. இப்படி நடந்து கொண்டால் தான் உடனுக்குடன் வியாதியைக் கண்டு பிடித்து அதை நிவர்த்தி பண்ணிக் கொள்ள முடியும். இல்லையென்றால்வியாதியை முற்றவிட்டுவிட்டு அதன் பின்னர் அதைச் சரிசெய்வதற்கு மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கும்.

ஒரு பெரியவருக்கு வயிற்றுக் கோளாறு, வாருங்கள் டாக்டரிடம் போகலாம் என்று கூப்பிட்டார்கள் அவரை ''வேண்டாம் பயமாக இருக்கிறது' என்றார் அவர். டாக்டர் வேறு யார்? உங்கள் மாப்பிள்ளை தான். பின் என்ன பயம்? என்றார்கள் 'அதுதான் பயம்' என்றார் அவர்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அடிப்படை ஆங்கில அறிவின்றி யாழில் பெருமளவு மாணவர்கள்

## ஆங்கிலபாட கல்விப் பணிப்பாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ் மவட்டத்தில் பெருமளவு மாணவர்கள் அடிப்படை ஆங்கில அறிவைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் ஆங்கிலக் கல்வியில் மிகவும் பின்தங்கியுள்ளனர்.

இவ்வாறு கவலைவெளியிட்டார். இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த ஆங்கில பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் செல்வி ஞான குமாரசாமி.

வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் மாணவரிடத்தில் ஆங்கில மட்டம் அடைவுகளை மதிப்பீடு செய்து வரும் அவர் எமது நிருபரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் மேலும் அவர் இது பற்றித் தெரிவித்ததாவது:

ஆங்கிலத்தில் நாம் பின்நிற்போமானால் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறும் உலகிற்கு ஈடு கொடுக்க முடியாத நிலையே உருவாகும்.

யாழ்ப்பாணத்தில் ஆங்கில பாடத்தைக் கற்பதற்கு அநேக மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களையே நாடுகின்றனர் தனியார் கல்வி நிலையங்கள் இல்லையேல் இங்கு ஆங்கிலமே கற்க முடியாதநிலைதோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பல பாடசாலைகளில் ஆங்கிலம் கிரமமாக கற்பிக்கப்படுவதில்லை என்பது அப்பட்டமான உண்மையாகும். இதேநேரம் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுகிறது மேலும் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் ஆங்கில பாடக் கணிப்பீடுகளும் மிகவும் தரம் குறைந்தனவாகவே உள்ளன எனவே ஆசிரியர்கள் கணிப்பீட்டு முறையை மாற்ற வேண்டும். வன்னி மாணவர்களிடம் கல்விகற்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்தும் துரதிஷ்டவசமாக அவர்கள் வறுமையுடன் போராட வேண்டிய நிலை காணப்படுகிறது.

ஆங்கில மொழி ஒரு அன்னிய மொழி என்னும் எண்ணத்தை விடுத்து எதிர்கால வாழ்க்கைக்கு அதன் அவசியத்தை உணர்ந்து மாணவர்கள் சிறப்புறக் கற்க வேண்டுமென்றார் அவர் (ஷ-19

# நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்துக்கான நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்ற போது தலைவராக சு.பரம்சோதி, செயலாளராக க.நாகேந்திரம், பொருளாளராக க.தர்மநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

# கூட்டத்தை ஒத்திவைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ள தீவக வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டத்தை ஒத்திவைக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வேலணைக் கிளையினர் தீவக வலயக் கல்விப்பணிப்பாளரைக் கோரியுள்ளது. (உ)

# கூடைப் பந்தாட்டத்தில் அரியாலை ஐ.வி.க.சம்பியன்

(சுண்டுக்குளி)

யாழ்.பல்கலைக்கழகத்தில், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இருகூடைப்பந்தாட்ட அரங்குகளின் திறப்பு விழாவும், பல்கலைக்கழகவிளையாட்டுச் சபையினால், யாழ் மாவட்டத்தில் உள்ள கழக அணிகளுக்கு இடையில் கடந்த சில வாரமாக நடத்தப்பட்டு வந்த கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டங்களும், பரிசளிப்பு வைபவமும், கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 7 மணி தொடக்கம், யாழ்.பல்கலைக் கழக உடற்கல்வி இணைப்பாளர் கே. கணேசநாதன் தலைமையில், மின் ஒளியில்பெருந் திரளான ரசிகர்கள் மத்தியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில், அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி, பல்கலைக்கழக அணியை, பலத்த போட்டியில் 16:15 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த எஸ். குகாயினி இப்போட்டியின் சிறந்த வீராங்கனையாகவும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியைச்சேர்ந்த நிசாந்தினி ஆட்டநாயகியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாட்டத்திற்கு தீர்ப்பாளர்களாக பி. தயாபரன், ஏ.எஸ். டிலான் ஆகியோர் கடமையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற காட்சி ஆட்டத்தில் பல்கலைக்கழக பழைய மாணவர்கள்,மணமாகாதவர்கள் அணி, மணமானவர் அணியை வெகு இலகுவாக 10:5 என்ற புள்ளிகள் கணக்கில் தோற்கடித்தது.

இறுதியில் இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் பல்கலைக்கழக அணி, சென்ற லைட்ஸ்அணியை73:50என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாகவும் இப்போட்டித் தொடரில்சிறந்த வீரனாகவும் பல்கலைக்கழக வீரன் எஸ். குணாகரன் தெரிவுசெய்யப்பட்டார்.

அத்துடன் யாழ். கூடைப் பந்தாட்ட அரசன் என்ற சிறப்பு விருதுக்கு உரிய அமரர் சூடாமணி ஞாபகார்த்த கேடயத்தையும் சாந்த குணாகரனே பெற்றமைகுறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும்,சிறப்பு விருந்தினராக பேராசிரியர் ரி. நந்தகுமாரும் கலந்து கொண்டனர். (ஷ-110)

# ஆடிப்பூரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயிலில் எதிர் வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைஆடிப்பூரத் திருவிழா நடைபெறவுள்ளது (ஷ)

# வவு.வளாக நிலை குறித்து பிரதமருக்கு கடிதம்

## சங்கரி எம்.பி.அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் நிலை குறித்துயாழ்.மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் வி.ஆனந்தசங்கரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது,

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் 1977இல் இரு பீடங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது; ஆரம்ப காலம் தொட்டு மாணவர்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாகி வருகிறார்கள். ஆய்வு கூட வசதியில்லாத காரணத்தால் மாணவர்கள் தங்களுடைய செய்முறைப் பயிற்சிக்காக கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு செல்ல வேண்டியுள்ளது.

அவசரத் தேவைகளை நிவர்த்தி செய்யும்படி சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு தாங்கள் அறிவுறுத்தும் பிரகாரம் அவசரத் தேவைகள் பட்டியலைக் கீழே தருகிறேன்.

- பாவிக்கப்படுகின்ற கட்டடம் பல்கலைக்கழகத்துக் குரியதென எந்த வேளையிலும் வகைப்படுத்த முடியாது.
- ஆய்வுகூட வசதி
- போதியளவு கணனிகள்
- நூலக வசதி
- வெளிமாவட்ட மாணவர்களுக்கு விடுதி வசதி
- விரிவுரைகள் வளாகத்துள் நடத்தப்படுவதை உறுதிப்படுத்தல். ஆகியன குறித்து -சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ)

# சாவகச்சேரி நவீனசந்தை இடிபாடுகள் அகற்றல்

(கல்வயல்)

கடந்த கால யுத்த அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்த சாவகச்சேரி நவீன சந்தை கட்டடந் தொகுதியின் மேல்தள இடிபாடுகள் தற்போது அகற்றப்பட்டு வருகின்றன.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையின் நிதியுதவியுடன் இக்கட்டடத் தொகுதி விரைவில் புனரசமைக்கப்படவுள்ளது;

சந்தையின் கீழ்த்தளக் கடைகள் சில உரிமையாளர்களால் திருத்தம் செய்யப்பட்டு வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மரக்கறி மற்றும் தேங்காய் விற்பனை நிலையங்களும் இயங்கத் தொடங்கியுள்ளன. (ஷ-111)

# இளைஞர் படைப்பிரிவு சட்டமூலம் மீதான விவாதம் நாளை ஆரம்பம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு நாட்டின் பல பாகங்களிலும் இளைஞர் படைப் பிரிவை விரைவில் அமைக்கவுள்ளது.

இளைஞர்களின் தொழில் மேம்பாடு கருதி தொழிற் கல்வியை வழங்கவும் அவர்களின் அபிவிருத்திகளைமுன்னெடுத்துச் செல்வதற்காகவுமே இப் படைப்பிரிவு அமைக்கப்படவுள்ளது.

'இளைஞர் படைப்பிரிவு' சட்டமூலத்தை பிரதமர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்;

இந்தச் சட்டமூலம் நாளையும் நாளை மறுதினமும் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது; (உ-8)

# அமெரிக்கத் தாக்குதலுக்கு ஒஸாமா பின்லேடன் காரணமில்லை

## பாக். ஜனாதிபதி முஷாரப் கருத்து

(இஸ்லாமாபாத்)

அமெரிக்க வர்த்தக மையத்தின் மீதான தாக்குதலுக்கு, ஒஸாமா பின்லேடன் காரணமாக இருந்திருக்க முடியாது எனதான் கருதுவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் மலைப் பிரதேசங்களில் ஒழிந்து வாழும் பின்லேடன் இந்த தாக்குதலுக்கான திட்டத்தை தயாரித்து இருக்க முடியாது.

செப்ரெம்பர் 11 ஆம் திகதித் தாக்குதலுக்கு ஒஸாமா பின்லேடன் நிதிஉதவிகளையும், ஆதரவையும் மட்டுமே வழங்கி இருக்க முடியும்.

இந்த தாக்குதலின் சூத்திரதாரி ஒஸாமா பின்லேடன் என்றே அமெரிக்கா கருதி வந்தாலும், இதற்கான காரணகர்த்தா வேறு ஒருவராக இருக்க வேண்டுமென தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## ஆயுத சோதனையை மேற் கொள்ள வருமாறு ஐ.நாவுக்கு அழைப்பு

(இலண்டன்)

ஈராக் மீதான ஆயுத சோதனையை மேற் கொள்ளவருமாறு ஐக்கியநாடுகள் சபைக்கு ஈராக்விடுத்தஅழைப்பை அவ்வமைப்பு வரவேற்றுள்ளது.

அதேவேளை, ஈராக்கின் இவ்வாறான அழைப்பைமுழுமையான அதிகாரத்துடன் அவ்வமைப்பு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈராக்கின் ஜனாதிபதி சதாம்ஹுசைனைபதவி கவிழ்க்கும் தமது குறிக்கோளில ஈராக்கின் இந்த அழைப்பு எவ்வாறான மாற்றத்தையும் ஏற்படுத்தாது எனவும், அமெரிக்க ஜனாதிபதிஜோர்ஜ் டபிள்யூ புஷ் கோடைகால விடுமுறையை கழிக்கும் பொருட்டுஅலுவலக பணியிலிருந்து விலகிய நிலையிலேயே இவ் அழைப்பை ஈராக் விடுத்துளளது எனவும் அமெரிக்க அமைச்சரவை சுட்டிக்காட்டியுள்ளது.

1991 ஆம் ஆண்டு வளைகுடா யுத்தம் முடிவடைந்த பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப்பரிசோதனைக் குழுவினர் ஈராக்கினுள் சென்று அங்கு தொடர்ந்து கடந்த 7வருடங்களாக தமது நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்டு வந்தது.

எனினும் ஐக்கிய நாடுகள் சபையின அமெரிக்க சார்புக் கொள்கையைகாரணம்காட்டி 1998 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபைப்பிரதிநிதிகளை ஈராக் வெளியேற்றியது.

இதன் பின்னர் இன்றுவரையான காலப்பகுதி வரையில் ஈராக்கின் ஆயுத சோதனைகளை மேற்கொள்ள எந்தவொரு சர்வதேச சோதனை குழுவுககும் அனுமதியளிக்கப்படவில்லை.

ஆனால் ஈராக்கின் இவ்வாறான அழைப்பை தொடர்ந்து அமெரிக்க-ஈராக் இடையேயான உறவுகள் மேலும் விரிசல் அடையலாம் என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (உ-8)

## உலக சூழல் மாநாடு 26 இல் ஜெனிவாவில்

(லண்டன்)

உலக சுற்றாடல் உச்சி மாநாடு எதிர்வரும் 26 ஆம் திகதி தென்ஆபிரிக்காவில் உள்ள ஜெ ஹானர்ஸ் பேர்க்கில் நடை பெற ஏற்பாடாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்திகுறித்தான இவ் மாநாட்டில் குடிநீர், உணவுப்பாதுகாப்பு, சுகாதாரம் முதலான அனைத்து விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளன.

பூகோளவளங்கள் அழிப்பது குறித்தும், வளர்முக நாடுகள் எதிர்நோக்குகின்ற சிக்கல்கள் குறித்தும் இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளன.

இதேவேளை 10 ஆண்டுகளுக்கு முன் ஜெனிரோவில் நடைபெற்ற சூழல் உச்சி மாநாட்டை அடுத்து இடம் பெறும் மாநாடு இதுவாகும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-03)

## பயணிகள் கப்பல் சேவை ஒப்பந்த வரைவு நிறைவு

(புதுடில்லி)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பயணிகள் கப்பல் சேவையை நடத்துவது தொடர்பான ஒப்பந்த வரைவு நிறைவு செய்யப்பட்டுள்ளதாக இந்திய மத்திய போக்குவரத்துத்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்திற்குஅமைவாக தூத்துக்குடி துறைமுகத்தில் பயணிகள் தங்கும் அறை, சுங்கப்பகுதி மற்றும் வங்கி வசதிகள் என்பன ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை, இந்த ஒப்பந்தத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மத்திய அரசின் உயர் மட்டக்குழுவொன்று இம்மாத இறுதியில் கொழும்புக்கு வருகை தந்து கப்பல்துறை அதிகாரிகளுடன் விரிவான பேச்சுக்கள் நடத்தவுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (த)

## தாய்வானின் அழைப்புக்கு சீனா கடுங் கண்டனம்

(தைப்பி)

சீனாவிலிருந்து சுதந்திர நாடாக பிரிந்து செல்வதற்கான மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்துமாறு தாய்வான் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளமைக்கு சீனா கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

தாய்வானின் ஜனாதிபதி சென் சூ பியான் அந்நாட்டு தொலைக் காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியில், சீனாவிலிருந்து தாய்வான் பிரிந்து செல்வதற்கான மக்கள் கருத்துகணிப்பொன்றை நடத்தவேண்டும் எனக்கோரி சீனாவுக்கு அழைப்பு விடுத்ததாகவும் தெரிவித்திருந்தார்.

தாய்வான் ஹொங்ஹொங்கிற்கோ அல்லது மிற்றெல்லுக்கோ இரண்டாவதாக பின்நிலையில் நிற்கமுடியாது. இது இறைமையுடன் கூடிய சுதந்திர நாடென தாம் தெளிவாக கூற விரும்புவதாகவும் அவர் அப்பேட்டியின் போது தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (க-08)

## பாக். இந்திய பேச்சை விரைவில் ஆரம்பிக்குக பிரான்ஸ் வேண்டுகோள்

(புதுடில்லி)

ஆசியப்பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை தணிக்க இந்தியாவும்- பாகிஸ்தானும் உடனடியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டுமெனபிரான்ஸ் அரசு வேண்டுகோள்விடுத்துள்ளது.

பிரான்சின் வெளிவிவகார அமைச்சர் டொமினிக் வில்சன் இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயிடம் இந்த வேண்டுகோளினை நேரடியாக விடுத்துள்ளார்.

இந்தியா- பாகிஸ்தான் இடையே இருந்து வரும் காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக, அதன் எல்லைப் பிராந்தியத்தில் நடைபெற்றுவரும் தாக்குதல்கள் காரணமாக வருடா வருடம் பலஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகி வருவதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, இவ்விருநாடுகளும் தமக்கிடையே உள்ள பகைமையை மறந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும்எனவும் டொமினிக் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-08)

## அடியார்களுக்கு அன்னதானம்

மாவைக் கந்தன் தேர்த்திருவிழா தினமானநாளை ஆலய வடக்கு வீதி மடத்தில் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களால் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (உ(

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் இன்றுசெவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு மருதனார் மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரியில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

சகல நலன்புரி நிலையங்களினதும் நிர்வாகிகள் மற்றும்பொதுமக்கள்ஆகியோரை இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு சமாசத் தலைவர் அறிவித்துள்ளார். விடுதலைப் புலிகளின் அரசியல் துறை உறுப்பினர்களும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (த)

## கட்டுநாயக்கா ஊடாக பாலா இலங்கை வரலாம்

### அமைச்சர் மொறகொட அறிவிப்பு

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தினூடாக இலங்கைக்குள் வர முடியுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட கடந்த மாதம் அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுக்களின் போதே இதனைத் தெரிவித்ததாகவும்.

அன்ரன் பாலசிங்கம் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக இலங்கைக்குள் வருவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளுமென அமைச்சர் உறுதியளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் இந்த யோசனையை பரிசீலிப்பதற்கு அன்ரன் பாலசிங்கம் இணக்கம் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது. (க)

## ஸ்பெயினில்குண்டுவெடிப்பு சிறுமி உட்பட இருவர் பலி

(மாட்ரிட்.)

ஸ்பெயினில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கார்க் குண்டு வெடிப்பின் போது 4 வயதுச் சிறுமி உட்பட 2 பேர் சொல்லப்பட்டனர் 25 க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

ஸ்பெயினின் தலைநகரை அண்டிய சிறிய உல்லாச விடுதிகள் உள்ள மீன்பிடித்துறைமுகப் பகுதியிலேயே இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

கார்க்குண்டுவெடிப்புஇடம் பெற்ற போது அந்நகரை அண்டிய பிரதேசத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருந்த போதிலும், இருவர் மட்டுமே பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாஸ் பிரிவினை வாத குழுவினரே இந்த தாக்குதலுக்கு காரணம் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த தாக்குதலுக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை எனவும் தெரியவருகிறது. (உ-8)

## 'ஸ்பாட்டக்கஸ்' மேடையேற்றம்

(ஈச்சமோட்டை)

அடக்குமுறைக்கு எதிரான விழிப்புணர்வைத் தூண்டும் 'ஸ்பாட்டக்கஸ்' எனும் காவியமொன்றை யாழ். திருமறைக் கலாமன்றத்தினர் இம்மாதம் 30 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை மன்ற அரங்கில் மேடையேற்றவுள்ளனர் (உ.-59)

## சங்கே முழங்கு

### தென்மராட்சி தெற்கு புறக்கணிக்கப்படுவதுஏன்?

தென்மராட்சியில் யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளை நேரில் சென்று பார்வையிடும்அமைச்சர்கள்பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச அதிகாரிகள் தென்மராட்சியின் தெற்குப் பகுதிகளான தனங்கிளப்பு, மறவன் புலோ, கைதடி, கோயிலாக்கண்டி, தச்சந்தோப்பு, நாவற்குழி ஆகிய பிரதேசங்களைத் தொடர்ந்தும் புறக்கணித்து வருவது ஏன்?

தென்மராட்சியில் யுத்தம் ஆரம்பித்த முதல் பிரதேசமும் தெற்குப்பகுதியாகும். இப்பிரதேச இடம்பெயர்வானது 12.12.1999 இல் நடைபெற்றது. பின்பு தான் தென்மராட்சியின் ஏனைய இடம்பெயர்வுகள் நடைபெற்றன. ஆனால் தென்மராட்சியின் அழிவுகளைப் பார்வையிடும் பலரும் சாவகச்சேரிப் பகுதியையே பார்வையிடுகின்றனர். தெற்குப் பகுதிப் பிரதேசங்களைப்புறக்கணிப்பதுமக்களை விசனம் அடையச் செய்கிறது.

அண்மையில் கூட தென்மராட்சி அழிவுகளை பார்வையிட்ட உலக வங்கி அதிகாரி ஆப்கானிஸ்தான் போல் காட்சியளிப்பதாக ஆதங்கப்பட்டார் அவர் தென்மராட்சியின் தெற்குப் பகுதியை நேரில்சென்று பார்வையிடுவாராக இருந்தால் ஜப்பானில் கிரோஷிமா நகரில் அணு குண்டு தாக்கிய போது ஏற்பட்ட அழிவைப் போலவே அப்பிரதேசத்தை ஒப்பிடுவார்.

அந்த உலக வங்கி அதிகாரி அப்பிரதேச மக்களைச் சந்தித்து கலந்துரையாடியபோது அப்பகுதி மக்கள் தமது கஷ்டங்களையும் தேவைகளையும் எடுத்துக் கூறினார்கள். மிகவும் ஆவலுடன் கேட்டறிந்த குழுவினர் இரண்டு, மூன்று மாதங்களுக்கிடையில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்வகையில் தமதுவேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதாக உறுதியளித்தனர்.

தென்மராட்சியின் தெற்குப்பகுதியை இராணுவம் உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி வருகினறது. இதனால் அப்பகுதி மக்கள் மீளக்குடியமர்வதற்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டு வருகின்றது. அரசினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் பல மில்லியன் நிதி மீளக்கட்டியெழுப்புதல் என்ற பெயரில்வழங்கப்படுகின்றது இந்நிலையில் தென்மராட்சியின்தெற்குப்பிரதேசம் மீளப்புனர் அமைப்பதற்குஒதுக்கப்படும்நிதிகள் ஏனைய பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு விடும். பிரதேச அபிவிருத்தி என்பது நகர அபிவிருத்தியை மட்டும் கருத்திற் கொள்ளாது பின் தங்கிய கிராமங்களையும் முன்னேற்றுவதிலேயே தங்கியுள்ளது. இதனைக்கருத்திற் கொண்டு மக்களை அவர்களது சொந்த இடத்தில்மீளக் குடியமர்த்தும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட விடயங்களை கருத்தில் கொண்டு அப்பகுதி மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்களா?

தனங்கிளப்பு வாழ் மக்கள் சார்பாக

தி.விமலதாஸ்

சூழ்ச்சி முடிவு துணி வெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.
குறள்

# வலம்புரி

## பாலர் பாடசாலை!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை பதவியில் இருந்து விலக்கி விட்டு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன்கதிர்காமரைப் பிரதமராக்கி புதிய அமைச்சரவை ஒன்றை அமைப்பது தொடர்பான இரகசியத் திட்டமொன்று அம்பலத்துக்கு வந்துள்ளதாக அரசதரப்பு தகவல் வெளியிட்டுள்ளது. ஜனாதிபதிக்கு இருக்கக் கூடியதான அதிகாரங்களைக் கொண்டே இச் சதித்திட்டம் தீட்டப்பட்டதாக அரச தரப்புக் குற்றஞ் சாட்டியுள்ளது.

அம்பலமாகியுள்ளதாகக் கூறப்படும் சதித்திட்டம் பற்றி இரண்டு கருத்தினை முன்வைக்க முடியும். அதில் ஒன்று மேற்படி சதித் திட்டம், உண்மையாகவே ஜனாதிபதியின் சார்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். அல்லது இத்தகையதொரு திட்டத்தை ஜனாதிபதி மேற்கொண்டிருப்பதாக ஐ. தே. க. முன்னணி அரசு கதையைச் சோடித்திருக்கலாம். இதில் உண்மை எது என்பதை அறிவது மக்களின்கடமையாக இருந்தாலும் சதித்திட்டம் குறித்து மக்கள் பெரிதாக அலட்டிக்கொள்ள மாட்டார்கள் என்பது தெளிவு. ஏனெனில், பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவி சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாக இருக்க ஐ. தே.முன்னணி ஆட்சி நடத்தும் போது பாராளுமன்றம் கலைக்கப்படுவது சர்வ நிச்சயம் என்பதை மக்கள் நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர்.

அவ்வகையில் லக்ஸ்மன் கதிர்காமரை பிரதமராக்கும் சதித்திட்டம் அரசியல் வாதிகளிடம் அதிர்ச்சியை ஏற்படுத்துமே ஒளிய பொதுமக்கள் மத்தியில் எந்த அதிர்ச்சியையும் ஏற்படுத்தாது. தேர்தல் வருவதுஉறுதியென்ற முடிவில், இலங்கையின் அரசியல், நாட்டுநலன் கருதியதல்ல என்ற முடிவையும் மக்கள் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

தற்போதைய அரசியலில் ஒருவர் மாறி ஒருவர் ஊழல் குற்றச்சாட்டுக்களைசுமத்துவதைக்காண முடிகிறது. சுருங்கக்கூறின் பாலர்பாடசாலைப் பிள்ளைகளைப் போன்றே ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் நடந்துகொள்கின்றன.

# பாம்பு விஷம் போக்கப் பல மூலிகைகள் உண்டு

# பயம் அதிகரித்தால் விஷம் தலைக்கேறிவிடும்

## மருத்துவ விளக்கம்

வைத்திய கலாநிதி
**சி. சி. வேலும்மயிலும்**

விஷ கடிக்குப் பல மூலிகைகளை உபயோகித்து வைத்தியம் செய்வது நாட்டு வழக்கில் அதிகமாகக் கையாளப் பட்டு வந்துள்ளது. அந்த வகையில் பாம்புக் கடிக்கும் பல மூலிகைகள் பயன்படுகின்றன. பாம்பு தீண்டியவரை மனதினால் தாக்கப் படவிடக் கூடாது. ஆறுதல் மொழி கூறிக்கடிவாயிலிருந்து 4அங்குலம்மேல்த ள்ளிகயிறுக் அல்லதுசீலைத்துண்டினால் இறுக்கிக்கட்டிக் கொண்டு கடிவாயிலிருந்து இரத்தம் வெளிவரப்பண்ண துப்புரவான சிறுகத்தியினால் சிறுகக் கீறி கடிவாயிலிருந்து சிறிது இரத்தம் வரப்பண்ணி (இம்முறையைதற்கால முறை ஆதரிக்கவில்லை) கடிவாயில் வெந்நீர் ஊற்றிக் கொண்டிருக்கவேண்டும்.

**விஷம்ஆவியாக வெளியேறும்**

கருந்துளசி அல்லது வெண்துளசி இடித்துச் சாறுபிழிந்து ஒரு அவுன்ஸ் குடிக்கக்கொடுக்கவும், வாழைத் தண்டின் சாறு ஒரு அவுன்ஸ் (நவீன முறைப் படி) குடிக்கக் கொடுக்கலாம். பப்பா இலைத்துளிரும் சுண்ணாம்பும் சேர்த்துக் கசக்கி கடிவாயில் வைத்துக் கட்டிவிட விஷம் தீரும். பாம்பு கடித்தவுடன் கடிபட்ட பகுதியை மண்ணெண்ணெயில் அமிழ்த்தி வைத்தால் புகை புறப்படுவது போல் கடிவாயிலிருந்து பச்சையாக ஆவி போன்ற தொன்று வெளிப்படும், அதன் மூலமாய் விஷம் வெளிப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. பாம்பு கடித்து விஷம் தலைக்கேறி அறிவு மயங்கியிருந்தால் மயிலிறகை நெருப்பில் கொளுத்தி அதை ஒரு தென்னோலைக் குழலில் செலுத்தி நசியமிடின் விஷமிறங்கிஅறிவு தெளியும்.

உத்தமாகாணி, வேரைச் சந்தனக் கல்லின் மீதுசலம் விட்டு சந்தனம் போல்அரைத்துச் சலிக்கம் போடுக ,பின்னர் அதில்ஒன்றரைக் கழஞ்சு அளவு உள்ளுக்குக் கொடுப்பின் விஷமிறங்கி உடனே சரீர ஆரோக்கியம் உண்டாகும். அணிஞ்சில் வேரினது பட்டையைக் காடியிலரைத்துக் காடியில்கலக்கிக் கொடுத்தால் விஷம் நீங்கும். 31 மிளகு, 4உள்ளிப்பல்லு ஆகிய இரண்டையும் தேன் விட்டு அரைத்து எடுத்து உட்கொளக்கொடுத்தால்விஷம் நீங்கும். பின்பு ஒருசட்டியில் வேப்பெண்ணெயை விட்டு அது நன்றாகக் கொதித்த பின் அதன் மேல் ஒருகரண்டி உத்தமாகாணிச் சாறு விட்டு அந்த எண்ணெயிலிருந்து வரும் ஆவியைப் பாம்பு கடித்த வாயிலில் பிடிக்க விஷக்கடுப்பு நீங்கும், பூவரசம் பட்டை, சிற்றகத்தி வேர்ப்பட்டை, கறியுப்பு ஆகியவற்றைச் சமஎடையாக எடுத்துச் சாறெடுத்து வடிகட்டிகண், காது, நாசிகளில் பிழிந்திடில் எல்லாவிஷங்களும் இறங்கும்.

**உப்பு, புளி தவிர்க்குக**

ஒரு நெருப்புக் குச்சிச் துட்டைக கடிவாயில் பிடிப்பதாலும் விஷம் நீங்கும், சஞ்சாங்கோரையைச் சமூலமாக எடுத்துத் துவைத்து சாறு பிழிந்து ½ அவுன்ஸ் முதல் 1½ அவுன்ஸ் வரையில் ஒருநாளில் இருமுறைகொடுக்கின் அட்டநாக விஷமு நீங்கும். ஆடுதின்னாப் பாலையினது சமூலம் அல்லது ஐவிரலிச் சமூலம் என்ற இவற்றில் ஒன்றைத் துவைத்து பிழிந்தெடுத்த சாற்றில் ஒரு அவுன்ஸ்வீதம் மூன்று நாள் காலை நேரத்தில் கொடுத்துவரின்சர்ப்பவிஷம்தீரும். பஞ்சபாண்டவர் முல்லைஎன்பதன் வேர் அல்லது பெருமருந்துக் கொடிவேரின்ஒரு பிடி எடுத்து நீர் விட்டுஅவித்து எடுத்த கஷாயத்தைக் கொடுப்பின் சர்ப்ப விஷம் தீரும், முனையுடைய மஞ்சளைச் சுட்டுக் கடிவாயில் வைத்து அழுத்த விஷம் முறியும். கொளுக்கி இலைகளைப் பறித்து 1 பிடி விழுதுபட அரைத்து எலுமிச்சம்காயளவு உள்ளுக்குச் சாப்பிடக்கொடுக்கவும் அன்றுஉப்பு புளிசேர்க்காது சஞ்சி குடிக்கக கொடுக்கவும் எட்டிமரப்பட்டையின உளதோலை அரைத் ஒருபாக்களவு சாப்பிடக் கொடுக்கலாம். 3 நாள் உப்பு புளி சேர்க்காது பத்தியமாக இருக்கவேண்டும். பெரியாள் நங்கை, அல்லது சிறியாள் நங்கை இலை 1 பிடி எடுத்து துப்புரவாக்கி அரைத்து ஒரு பாக்களவு சாப்பிடக் கொடுக்கவும்.

இதரைவாழை அல்லது சாதாரண வாழைக் கிழங்கை இடித்துப்பிழிந்த சாறு ஒரு டமிளர் குடிக்கக் கொடுக்கவும், இவ்விஷத்தினால் மாரடைப்பு ஏற்பட்டு மயக்கமானால் தும்பை இலை, துளசி இலைஒருபிடிஎடுத்துப்பிழிந்த சாற்றை ஒருமேசைக் கரண்டியளவு உள்ளுக்குக்கொடுக்க நன்மை பயக்கும். பாம்புக்கடியினால் தலைக்கு விஷமேறி மயக்கநிலை யுண்டானால் வாழை மடல்களைப் பரப்பி அதன்மேல் நோயாளியைக் கிடத்திவிட சுகமுண்டாகும். அறுகம் புல்லை அரைத்துக் கடிவாயில் வைத்துக் கட்டினால் விஷம் மாறும். கடிபட்டவர் மயக்கமானால் அருகிலிருப்பவர் அறுகம்புல்லைச் சப்பி அதைப்பிழிந்து மூக்கில் விட விஷம் குறைந்து மயக்கம் தெளியும் மகிளம் விதையைச் சுத்தப்படுத்தி வெந்நீர் விட்டு அரைத்து நெல்லிக்காயளவு உள்ளுக்குக் கொடுத்து வெந்நீர் குடிக்கக் கொடுக்க நஞ்சு குறையும் எருக்கம்இலையைத் துப்பரவு செய்து சப்பிவிழுங்கினாலும்நஞ்சு அகலும். பாம்புக்கடியினால் மயக்க மேற்பட்டால் தும்பையிலையைக் கசக்கிப் பிழிந்து 2 துளிசாறு மூக்கில் விட விஷம் மாறும். மூர்ச்சை தெளியும்.

தும்பைப்பூ, தும்பையிலை இரண்டையும் ஒரு பிடி எடுத்து இடித்து சாறு பிழிந்து ஒரு மேசைக்கரண்டியளவு உள்ளுக்குக் கொடுக்க சிறிது நேரத்தில் வாந்தியும், பேதியுமாகி உடலில் சூடு உண்டாகும். இதுவே விஷம் தெளிந்து வருவதற்கான அடையாளமாகும். இதிலிருந்து உயிருக்கு ஆபத்தில்லை என்பதை உணரலாம்.

**விஷம் ஏறும் அறிகுறிகள்**

கடிவாயில் பற்றிக்கொண்டு விஷமேறினால் அவ்விடத்தில் நோவும், தினவும், வீக்கமும், எரிச்சலும் உண்டாகும். இக் குணங்களில் ஒன்றேனும் இல்லாவிடில் விஷம் ஏறவில்லை என்றே அறியவேண்டும். சர்ப்பம் கடித்தவுடன் கசப்பு வஸ்துக்களைத் தின்றால் அச்சுவை மாறுகினறமையாலும், தலைமயிரைப் பிடித்திருத்தால் நோவு தெரியாமையாலும் விஷம் தலைக்கேறி விட்டதென்றே அறியவேண்டியது விஷத்தினால் மூச்சடங்கிக் கிடக்கும் ஒருவர் தேகத்தில் எங்கேனும் ஒரு பேனாக்கத்தியால் கீறுவதனால் அதிலிருந்து இரத்தம் வரின் அவரது உயிர் நீங்கவில்லை என்றும், கீறிய விடத்தில் இரத்தத்துக்குப் பதிலாக நீர்பொசியினும், கைகால் விரல்களைப் பிடிக் திழுக்கின் நெட்டி முறியாதிருக்கினும் உயிர் நீங்கி விட்டதென அறிதல் வேண்டும்.

கடிவாயில் ஒரு செப்பு அல்லது பித்தளைப் பாத்திரத்தை வைத்துப் பிடிக்கும்பொழுது அது சுடுமாயின் கடியுண்டவர் உடலில் விஷமேறியிருக்கின்றதென்றும், அதுகுளிர்ச்சியுடையதாயின் விஷம் இல்லை என்றும் அறிக, விஷக்கடியினால் பீடிக்கப்பட்டவர்கள் மூன்று நாட்களுக்கு உப்பு, காரம், புளிப்பு, எண்ணெய் சேர்க்கக் கூடாது. கடிபட்டவருக்கு அன்று இரவு மட்டும் நித்திரை கொள்ள விடக்கூடாது. கொடுக்கும் ஆகாரம் பச்சைப்பயறு, பச்சையரிசிக் கஞ்சி என்பனவாக இருக்கலாம்.

## தினசரி தியானம்

### புதையல்

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே

-திருமந்திரம்

உள்குவார் உள்ளிருக்கும் இறைவா உன்னை நான் எண்ணுமளவு, உன்னை எனக்குச்சொந்தமாக்குகிறேன் அழியும் பாங்குடையது உனது உடல். ஆனால் அதனுள் எவ்வளவு சக்தி, எத்தனை வித வல்லமைகள் எத்தகைய விசைகள் மறைந்திருக்கின்றனவென்று உனக்குத் தெரியுமா? மனிதன் மண்ணுலகினுள் வந்து யுகங்கள் பல கடந்து போய்விட்டன. ஆனால்அவனுக்குரிய வல்லமைகளில் அணுவளவுக்குமேல் இன்னும் வெளியாகவில்லை. ஆகையால்மனிதன்ஒன்றுக்கும்உதவாதவன்என்று சொல்லிவிடலாகாது.

உள்ளே புதைந்திருக்கும் சக்தி அளப்பரியது. எவ்வளவுதான் புலப்படுத்தினாலும் அது முடிவில்லாதது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

# அமிர் பாவித்த காரையே மகிந்தவும் பாவனை

(கொழும்பு)

அமரர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் இருந்து பாவிக்கப்பட்டுவந்த காரினையே இப்பொழுதும் தான் பாவித்து வருவதாக எதிர்க்கட்சித்தலைவர் மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவருக்குரிய முறையான வாசஸ்தலம் அளிக்கப்படாத நிலையில் வசதிகள் குறைந்த காரியாலயம் ஒன்றிலேயே தனது கடமைகளைச் செய்து வருவதாகவும், அமைச்சர்களுக்கான குண்டு துளைக்காத கார்கள் இப்பொழுதுதான் இறக்குமதிசெய்யப்பட்டுள்ளன என்றும் கூறிய மகிந்த ராஜபக்ஷ தனக்கு சலுகைகள் வழங்கியிருப்பதாக சில ஊடகங்கள் தெரிவித்துள்ளதையும் மறுத்துள்ளார். (ம)

# புலமைப் பரிசில் தொகை 50 ரூபாவால் உயர்வு

(கொழும்பு)

சமுர்த்தித் திட்டத்தின் மூலம் மாணவர்களிற்கு வழங்கப்பட்டு வந்த புலமைப் பரிசில் தொகை மேலும் 50 ரூபாவால்உயர்த்தப்பட்டுள்ளதாக சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களின் போது சமுர்த்தி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 250 ரூபாவாக வழங்கப்பட்டு வந்த இந்த தொகை இப்போது300 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேவேளை இந்ததொகை 50ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளதுடன், இத்திட்டத்தின் கீழ் மேலும்3ஆயிரம் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கு தேவைப்படும் 120 இலட்சம் ரூபா நிதியும் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## மினி பஸ் விபத்தில் பெண் மரணம்

(மந்திகை)

வடமராட்சி ராஜ கிராமம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1மணி யளவில் இடம் பெற்ற மினிவான் விபத்துச் சம்பவம் ஒன்றில் வயோதிப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்தவரான கணேஷ் அன்னலட்சுமி (வயது 56) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவர் ஆவார்.

(த-23)

## அமுக்க வெடியில் உழவு ...

நேற்றுக் காலை 7.30 மணி தொடக்கம் மேற்படி வீதியூடாக 4 தடவைகள் மண் ஏற்றுவதற்காக உளவு இயந்திரம் சென்று வந்ததாகவும், ஐந்தாவது தடவை மண்ணுடன் அவ் வீதியூடாக உளவு இயந்திரம் வந்து கொண்டிருந்தபோது பாரிய சத்தத்துடன் அமுக்கவெடி விபத்து அனர்த்தம் நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெடி அனர்த்தத்தில் சிக்கிய உளவு இயந்திரம் சுமார் 40 அடி தூரத்திற்கு மேலே தூக்கி வீசப்பட்டு சிதறிக் காணப்படுகிறது.

அனர்த்தத்தில் சிக்கிய சாரதியின் உடல் சிதறியது. மற்றைய நபர் தூக்கி வீசப்பட்ட நிலையில் மீட்கப் பட்டார்.

சம்பவ இத்தில் ஐந்து அடி ஆழமுள்ள அகன்ற பாரிய குழி ஒன்று காணப்படுகிறது.

யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதேவேளை கடந்த வருடம் இருபாலைப் பகுதியில் ஆட்டோ அமுக்க வெடியில் சிக்கி அதில் பயணம் செய்த 7 பேர் உயிரிழந்தமை தெரிந்ததே. அச் சம்பவத்தை அடுத்து நீண்ட காலத்துக்கு பின்னர் இடம்பெற்ற இச் சம்பவத்தினால் மக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். (இ-43)

## முஸ்லிம்களின்...

அனுபவிக்கும் சகல உரிமைகளையும் முஸ்லிம் மக்களும் அனுபவிக்கும் வாய்ப்பு ஏற்படவேண்டும்.

இதனை அடிப்படையாகக் கொண்டே விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. தற்போது முஸ்லிம் மக்கள் தொடர்பாக பாரபட்சம் காட்டப்பட்டு வருவது குறித்து மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

### மாவட்ட...

ரணில் விக்கிரமசிங்கா அமைச்சர் மகேஸ்வரனிடம் தெரிவித்தார்.

இதேபோல் செல்வம் அடைக்கலநாதனும் பிரதமரிடம் ஆட்சேபம் தெரிவித்ததை அடுத்து இருவரதும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் நியமனங்கள் ரத்துச் செய்யபபடலாமென்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம)

## சமாதானப் பேச்சுக்கு பின்னர்...

நிறுத்தம் செய்து விடுதலைப்புலிகளுடன் தாய்லாந்தில் பேசுவதற்கு திட்டமிட்டோம். அதற்கு முன்பதாக அமைச்சர் மிலிந்த மொறகொட லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பேசியுள்ளார். இது சமாதானப் பேச்சவார்த்தையில் ஒரு படி முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

அரசும் விடுதலைப்புலிகளும் யூன் மாதத்தில் சந்தித்துப் பேசுவதென்று முதலில் முடிவானது அது பின்னர் யூலை மாதத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. தற்போது விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளார்.

அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் நாடு பிளவுபட்டுள்ளது என்று கூறுவது தவறான கருத்தாகும். இலங்கை ஒரு நாடு என்றவகையில்தான் அமைச்சர் மொறகொடவிடம் இலங்கைக்கு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தார் எனச் சுட்டிக்காட்டிய பிரதமர் ரணில் ஐக்கிய இலங்கைக்குள்ளேயே பேச்சு வார்த்தை நடைபெறும் எனவும் அப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

(ம)

### தச்சனாமருப்...

மாறு பொலிஸார் விடுதலைப்புலிகளிடம் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலை தொடர்பாக மேலும் இரு சந்தேக நபர்கள் தேடப்பட்டு வருகின்றனர்.

(ம)


விக்னா கல்வி நிறுவனம்

A/L DAY CLASS
கலைப் பிரிவு

ECO - திரு. விக்கி - 7-8 மணி, H.C திரு. பத்மராஜா - 7-8மணி
LOG - திரு. சயந்தன் - 7-8 மணி, Drama - திரு. மதி 12-1மணி
Tamil - திரு. குழந்தை - 8-9மணி, CHri - திரு.வசந்தன் -9-10 மணி
Geo - திரு. பாபு - 10-11 மணி, Hist - திரு. சுதன் -11-12 மணி
ஆரம்பம் - 07.08.2002 காலை 7 மணி
LOG - திரு.சயந்தன் - சனி, ஞாயிறு 2 மணி
Tam - திரு.குழந்தை - பிரிவு II 3.00 மணி (C/4812)





லாவண்யா
பல் மூக்கு கண்ணாடி அகம்

சிறந்த முறையில் உங்கள்
- கண்களைப் பரிசோதித்து கண்ணாடி வழங்குதல்
- பல் கட்டுதல்
- மிதப்புப் பற்களுக்கு கிளிப்போடுதல்



போன்றவற்றை செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடங்கள்

கொடிகாமம் வீதி, நெல்லியடி, (லட்சுமி தியேட்டர் அருகில்)

லாவண்யா, 552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி வைரவர் கோயில் முன்பாக)

நெல்லியடியில் பார்வையிடும் நாட்கள்
செவ்வாய், வியாழன், சனி நேரம்:-8.00 - 12.00 மணி



வாடகைக்கு

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் சிற்றி போய் தையலகத்திற்கு அருகில் உள்ள இரு பெரிய கடைகளும் அதற்குப் பின்னால் உள்ள ஸ்ரோர் அதனுடன் கூடிய சிறிய கடை என்பன வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-
இராசையா சாவித்திரி
65, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (5782)



SHOTOKAN KARATE ACADEMY

Affiliated to : I.U.M.A (J.S.K & U.T.K.F), J.D.K.A



கராத்தே பயிற்சிப்பாசறை

11-08-2002,
ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.00 - 6.00 வரை
S.K.A தலைமையகத்தில்
நடைபெறும்.

கொழும்பு I.U.M.A தலைமையகத்தில் நடைபெற்ற பயிற்சிப் பாசறையில் பங்குபற்றிய S.K.A ஆசிரியர்குழு பயிற்சிகளை நடாத்தவுள்ளது.

புதிய மாணவர்க்கான பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகட்கு: ஆசிரியர் டி. அன்ரோ டினேஸ், M.T.SK.4th Dan.

விளம்பர அன்பளிப்பு :
செல்வா ஹாட்வெயார்ஸ்
120 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் - 021 2873
(கட்டிட பொருள் விற்பனையாளர்கள்)
[5780]



ஈசுசு எல்ப் 250 / 350 (IZUSU ELF)
gtz வாடகைக்குத் தேவை

கட்டிட பொருட்கள் விநியோகம் செய்வதற்கு ஈசுசு எல்ப் (IZUSU ELF CANTER) ரக வாகனங்கள் வாடகைக்குத் தேவை.
விபரங்களுக்கு கீழ் காணும் விலாசத்தில் உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P : 2238

GTZ - JRP
11, KANDY ROAD,
JAFFNA.

[C/4801]



FORUT - JAFFNA

There exists a vacancy for the post of Administrative Assistance at FORUTs office in Jaffna.

Necessary qualifications:
- *University Degree Holder*
- *Diploma in Micro Soft Office*
- *English - Spoken & Written*

Desirable qualifications:
*Relevant working experience.*
*Knowledge Sinhala.*

Application must reach:
Programme Manager,
FORUT
67, Temple Road, Jaffna.

**Before 15th August 2002**
Only short listed candidates will be called for an interview.
Applicants must be below 45 years

FORUT
[5781]


## "லுமாலாவின்"
## அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

இ.ச. பேரம்பலம் சக நிறுவனத்தின் (E.S.P) அனுசரனையுடன் சிற்றி சைக்கிள் நிறுவனத்தினர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடாத்திய லுமாலா துவிச்சக்கரவண்டியின் அதிஷ்ட இலாப சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

| | பெயர் | | | கடையின் பெயர் |
|---|---|---|---|---|
| (01) | A. நித்தியானந்தன் | இணுவில் | 0906001829 | ஆனந்தமூர்த்தி |
| (02) | S. கீதபொன்கலம் | மல்லாகம் | - | E.S.P |
| (03) | பா. பிலிப்நேரி | நாவாந்துறை | 56684056 | வெங்கடேஸ்வரா |
| (04) | மு. சிறிகாந்தன் | உரும்பிராய் | 473530279v | வெங்கடேஸ்வரா |
| (05) | ம. ஜெயந்தினி | யாழ் | 557711546v | E.S.P |
| (06) | அ. ஆனந்தராசா | அரியாலை | 502000276v | E.S.P |
| (07) | N. சுஜிதரன் | யாழ் | 0901024215 | இ.அ.வ (பொது) கூட்டு |
| (08) | G. சுகுணவதி | சுன்னாகம் | 606871830v | E.S.P |
| (09) | க. ஞானரெட்டினம் | கொல்லங்கலட்டி | - | E.S.P |
| (10) | இஸ். இம்மக்குலற்ரா | குருநகர் | 0901021415 | வெங்கடேஸ்வரா |
| (11) | லோ. கிறிஸ்துராஜ் | குருநகர் | 623562573v | கணபதி ஸ்ரோர்ஸ் |
| (12) | தி. ஞானவேல் | அளவெட்டி | 717730922v | E.S.P |
| (13) | க. சிவனாதன் | ஆனைக்கோட்டை | 610016278v | E.S.P |
| (14) | த. கணபதிப்பிள்ளை | புற்றாலை | - | வே. மனோகரன் |
| (15) | ந. வியாசன் | ஓட்டுமடம் | 803280487v | வெங்கடேஸ்வரா |
| (16) | தி. சிறீஸ்கந்தராசா | காரைநகர் | 581780850v | E.S.P |
| (17) | பொ. ரஞ்சித் | சங்கானை | 670731485v | பாக்கியரட்ணம் |
| (18) | கி. நிரோஜன் | சுன்னாகம் | - | லிங்கம் வர்த்தக நிலையம் |
| (19) | தி. தர்மலிங்கம் | வேலணை | 470804335v | வெங்கடேஸ்வரா |
| (20) | T. சிவரூபன் | ஓட்டுமடம் | 720910730v | E.S.P |
| (21) | ந. ஜெயக்குமார் | அனலைதீவு | - | வெங்கடேஸ்வரா |
| (22) | மு. அருளானந்தம் | யாழ் | 490662847v | ஆனந்தமூர்த்தி |
| (23) | செ. செபிந்தன் | சாவகச்சேரி | 091035172 | E.S.P |
| (24) | வை. தர்மபாலச்சந்திரன் | சுழிபுரம் | 501973661v | E.S.P |
| (25) | செ. இராசையா | மல்லாகம் | 320800269v | பிள்ளையார் |

இந் நிகழ்விற்கு
**சிற்றி சைக்கிள் ஸ்ரோர்ஸ் 20 துவிச்சக்கரவண்டியும்**
**இ.ச. பேரம்பலம் சக நிறுவனம் 03 துவிச்சக்கரவண்டியும்**
**வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ் 02 துவிச்சக்கரவண்டியும்**
வழங்கிப் பெருமைப் படுத்தியவர்கள் ஆவர்.

(C/4313)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.